*Sri Lankan Journal of Arabic and Islamic Studies, 5(1) 2022*
*Published by Faculty of Islamic Studies and Arabic Language, ISSN: 2550:3014*
*Received:26th May 2022/Accepted: 02nd July 2022*

# இலங்கை முஸ்லிம் விவாக-விவாகரத்துச் சட்டத்தில் பலதாரமணம்: ஓர் இஸ்லாமிய சட்டவியல் நோக்கு

# (Polygamy in Sri Lanka Muslim Marriage and Divorce Act: An Islamic Legal Perspective)

M.T.F. Bushra[1], S.M.M. Mazahir[2]
[1]Temporary Assistant Lecturer
Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka
[2]Professor, Faculty of Islamic Studies and Arabic Language,
South Eastern University of Sri Lanka
[1]bushrathaheer@seu.ac.lk, [2]mazahirsmm@seu.ac.lk

## Abstract

*Islamic Sharia, which makes marriage as a rite of passage, also imposes restrictions on polygamy. The Quran and the Sunnah restrict polygamy by imposing strict rules and conditions on it. The purpose of this study is to analyze the extent to polygamy is practiced under the Muslim Marriage and Divorce Act (MMDA) in the Sri Lankan context is compatible with Islamic Sharia. In Muslim countries, its practiced under very strict conditions and it inforce without adequate legal restrictions on Sri Lankan Muslims living as a minority. This study is a qualitative study and is entirely based on secondary data. Previous articles related to the topic have been reviewed and the data obtained have been analyzed through a hypothetical framework.*

***Keywords:*** *Sri Lankan Muslim marriage and Divorce Act, Polygamy, Islamic Sharia*

### ஆய்வுச் சுருக்கம்

திருமணத்தினை ஒரு இபாதத்தாக ஆக்கிய இஸ்லாமிய ஷரீஆ அதனூடாக பலதாரமணத்திற்கு கட்டுப்பாடுகளையும் விதித்துள்ளது. அல்-குர்ஆனிலும் சுன்னாவிலும் பலதாரமணத்திற்கு விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் கடுமையாக விதித்திருப்பதன் மூலம் அதனை கட்டுப்படுத்துகிறது. அந்த வகையில் இலங்கைச் சூழலில் முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டத்தின் கீழ் நடைமுறையில் இருந்து வரும் பலதாரமணமானது இஸ்லாமிய ஷரீஆவுடன் எவ்வளவு தூரம் ஒத்து செல்கிறது என்பதனை பகுப்பாய்வு செய்வதனை இவ்வாய்வு நோக்கமாக கொண்டுள்ளது. பல முஸ்லிம் உலக நாடுகளிலும் இதன் நடைமுறை மிகக் கடுமையான நிபந்தனைகளின் கீழ் இருந்து வரும் அதே வேளை சிறுபான்மையினராக வாழும் இலங்கை முஸ்லிம்களுக்கு போதியளவு சட்டக் கட்டுப்பாடுகள் இன்றி அமுலில் காணப்படுகிறது. இவ்வாய்வானது பண்புசார்ந்த ஆய்வாகவும் முழுமையாக இரண்டாம் நிலைத் தரவுகளையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது. தலைப்புடன் தொடர்புபட்ட முன்னைய இலக்கியங்களான ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள், சஞ்சிகைகள், இணையத்தள ஆக்கங்கள், காணொளிகள் என்பவற்றுடன் இலங்கை முஸ்லிம் விவாக- விவாகரத்து சட்டம் (Muslim Marriage and Divorce Act (MMDA)) என்பன மீளாய்வுக்குட்படுத்தப்பட்டு, பெறப்படும் தரவுகள் கருதுகோள் கட்டமைப்பினூடாக பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. இஸ்லாத்தில் பலதாரமணம் தொடர்பான கண்ணோட்டம் மற்றும் இலங்கையில் பலதாரமணத்திற்கான சட்ட ஏற்பாடுகள் அவற்றின் நடைமுறைகள் தொடர்பான ஆய்வுகளுக்கு வாசிப்பாக கொள்ள முடியும்.

**திறவுச்சொற்கள்:** இலங்கை முஸ்லிம் விவாக- விவாகரத்து சட்டம் (MMDA), பலதாரமணம், ஷரீஆ

## 1. ஆய்வுப் பின்னணி

மனிதன் பூமியில் தோன்றியது முதல் படிமுறையாய் நாகரிக, கலாசார வளர்ச்சியின் நீண்ட ஓட்டத்தில் பலதாரமணம் அவனது சமூக வாழ்வில் நிலைபெற்று வந்துள்ளதை பல்வேறு பண்பாட்டு மானிடவியல் (Cultural Anthropology) ஆய்வுகள் நிறுவியுள்ளன (ரவுப், 2021). பலதாரமணம் எனும் போது ஒரு ஆண் பல பெண்களை திருமணம் செய்தல் என்பது polygamy என்றும் பல ஆண்கள் ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்வது polyandry எனவும் அழைக்கப்படும் (மஸாஹிர், 2014).

பலதாரமணம் எப்போது உலகில் தோன்றியது என்பது தொடர்பாக தெளிவான வரலாறு இல்லாத போதும் அது பல நூற்றாண்டுகளாக உலகில் நடைமுறையிலிருந்து வந்துள்ளது என்பது தெளிவானது. விதவைகளை திருமணம் செய்வதானது அனாதைகளை பராமரிப்பதிலும் உள்ள ஒரு சமூக யுக்தியாகும். முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் தன்னுடைய முதல் மனைவி மரணிக்கும் வரை 25 வருட காலம் ஒருதாரமணம் கொண்டே இருந்தார்கள் (monogamous). அதன் பின்னரே போரினால் விதவைகளாக்கப்பட்டவர்களை திருமணம் செய்து கொண்டார்கள் (பவுல், 2010). எவர் ஒருவரால் நீதியாக அவர்களிடத்தில் நடந்து கொள்ள முடியுமோ அவர் மட்டுமே நான்கு மனைவிகள் வரை திருமணம் செய்ய முடியும் என அல்குர்ஆன் இத்திருமண அமைப்பை அனுமதிக்கிறது. இது ஆப்கானிஸ்தான், ஈராக், பஹ்ரைன் போன்ற நாடுகளிலும் சட்ட ரீதியாக அனுமதிக்கபட்டிருந்த போதிலும் மிகக் குறைவாகவே நடைமுறையில் உள்ளது, அத்துடன், பலதாரமணம் முற்றாக தடுக்கப்பட்ட நாடாக தூனுசியா காணப்படுகின்றது, அல்-குர்ஆன்: ஸுரா அந்-நிஸா:129 (‘நீங்கள் பெண்களுக்கிடையில் நியாயமானவர்களாக ஒரு போதும் இருக்க முடியாது, அதுவே உங்களது தீவிர ஆசையாக இருந்த போதும்…’) எனும் வசனத்திற்கு இணங்க எந்தவொரு கணவனாலும் பல மனைவியரைச் சமமாக நடாத்த இயலாது என்ற புரிதல்களின் அடிப்படையில் அமைந்த 1956 ஆம் ஆண்டின் சட்டத்தின் கீழ் பலதாரமணம் தடை செய்யப்பட்டுள்ளது. இது சிறைத் தண்டனை அல்லது அபராதம் விதிக்கப்படக் கூடிய தண்டனைக்குரியதொரு குற்றமாகும். பலதாரமணமானது ஒழுங்கற்றதாகவும், இரத்துச் செய்யப்படக் கூடியதாகவும் கருதப்படுகின்றது. (அய்யூஸ், 2014)

நீதிமன்றின் அனுமதி மற்றும் ஏற்கனவே உள்ள மனைவியர்களின் அங்கீகாரத்தினையும் கோரக்கூடிய நாடுகளில் அல்ஜீரியா, பலதார விவாகங்கள் கட்டாயமாக நீதிமன்றத்தினால் அங்கீகரிக்கப்படல் வேண்டும் என்பதுடன், ஏற்கனவே உள்ள மனைவியரின் ஒப்புதலுடன் மட்டுமே செய்யப்படலாம். கணவன் தான் பலதாரமணத்தினைச் செய்வதற்கான நியாயத்தையும் மேலும் அனைத்து மனைவிகளையும் நியாயமாக நடாத்துவதற்கும், அனைத்து விவாகங்களதும் அத்தியாவசியமான தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யக்கூடிய தகைமையையும் கொண்டிருப்பதற்கான ஆதாரத்தினையும் வழங்கினால் மட்டுமே நீதி மன்ற அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ள முடியும். இந்தோனேசியாவில், ஏற்கனவே உள்ள மனைவியானவர் கணவனுக்கான விவாகக்கடமைகளை நிறைவேற்ற முடியாதவராக இருந்தால், உடல் நலக்குறைவினால் அல்லது குணப்படுத்த முடியாத நோயினால் துன்புறுபவராக இருந்தால் அல்லது பிள்ளைகளைப்பெற்றுக்கொள்ள முடியாதவராக இருந்தால் மட்டுமே நீதி மன்றத்தினால் அனுமதி வழங்கப்படும். மலேசியாவில் நான்கு மனைவிகள் வரை திருமணம் செய்ய அனுமதி இருந்தாலும் முஸ்லிம்கள் நீதிமன்றின் அனுமதியை பெற்றே விவாகம் செய்ய வேண்டும், அதே போன்று மொரோக்கோவில் கடுமையான சட்டக் கட்டுப்பாடுகள் இருப்பதனால் ஏறத்தாள பலதாரமணம் தடையெனும் நிலையே அங்கு காணப்படுகின்றது (முஸாவாஹ், 2021).

இலங்கையில் பலதாரமணம் என்பது முஸ்லிம் தனியார் சட்டத்தின் ஒரு பகுதியான விவாக-விவாகரத்துச் சட்டத்தில் அனுமதிக்கப்பட்ட அம்சமாகும். இது 1951ஆம் ஆண்டு முஸ்லிம் தனியார் சட்டத்தில் சட்டப் பிரகாரம் பிரிவு 24இல் ஒழுங்கமைக்கப்பட்டு இன்று வரை

நடைமுறையில் இருந்து வருகிறது. எவ்வாறாயினும் இலங்கையில் இதன் நடைமுறை பல்வேறு எதிர்மறையான தாக்கங்களை முஸ்லிம் சமுதாயத்தின் மீது ஏற்படுத்தியுள்ளதை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக பலதாரமணத்தை நாடுபவர்கள் அதன் கட்டுப்பாடுகளை மீறும் போது எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற விடயம் தொடர்பில் எத்தகைய சட்ட ஏற்பாடுகளும் காணப்படாமலும் பலதாரமணம் தொடர்பிலான ஷரிஆ ரீதியிலான கடப்பாடுகளை இலங்கை முஸ்லிம் விவாக- விவாகரத்து சட்டம் (Muslim Marriage and Divorce Act (MMDA)) உள்ளடக்கவில்லை. மேலும் அண்மைக்காலங்களில் கணவனினால் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு இழப்பீடு மற்றும் பராமரிப்புடன் விவாகரத்து பெற உதவுவதைவிட, இரண்டாவது அல்லது மூன்றாவது திருமணம் போன்றவற்றுக்காக கணவரின் நடத்தையை ஏற்றுக்கொள்ளுமாறு காதி நீபதிகள் பெண்களுக்கு அழுத்தம் கொடுப்பதோடு ஒரு பெண்ணிடமிருந்து குறிப்பாக ஒரு ஆண் மற்றொரு மனைவியை எடுத்துக் கொள்வது தொடர்பாக ஒரு புகார் தோன்றினால், காதி நீதிபதிகள் பெரும்பாலும் தீர்ப்பு வழங்குவதில் தாமதப்படுத்துவதையும் அறியமுடிகிறது (சியானா, 2020)

இந்நிலை தோன்ற அடிப்படைக் காரணம் பலதாரமணம் குறித்து காணப்படும் சட்ட ஏற்பாடுகளில் உள்ள குறைபாடுகளும் அவற்றை நடைமுறைபடுத்துவதில் உள்ள தவறுகளும் ஆகும் என பல ஆய்வுகள் முன்மொழிகின்றன. இவ்வாறாக இலங்கையில் நடைமுறையில் உள்ள பலதாரமணம் தொடர்பான சட்ட ஏற்பாடுகள் எவ்வளவு தூரம் இஸ்லாம் கூறிய வழிமுறைகளுடன் ஒத்துச்செல்கின்றது என்பதையும், அல்-குர்ஆன் சுன்னாவின் அடிப்படையில் பலதாரமணம் எவ்வாறு உண்மையில் அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதனையும் ஆய்வுக்குட்படுத்தும் முகமாக இவ்வாய்வு இடம்பெற்றுள்ளது.

## 2. ஆய்வுப் பிரச்சினை

இஸ்லாமிய மார்க்கத்தில் பல நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்பட்டுள்ள பலதாரமணம் ஆனது இலங்கை முஸ்லிம்களுக்கு உரித்தான விவாக-விவாகரத்து சட்டத்தில் (MMDA) உள்வாங்கப்பட்டு, பல்லாண்டு காலமாக சட்ட ரீதியான அனுமதியுடன் நடைமுறையிலும் இருந்துவருகின்றது. பலதாரமணத்திற்கான இச்சட்ட அனுமதி அதிகாரிகளினாலும், முஸ்லிம் சமூகத்தவர்களினாலும் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு வருவதாகவும் அதன் விளைவாக பல்வேறு நெருக்கடிகளுக்கு பெண்களும், குழந்தைகளும் தள்ளப்பட்டுள்ளதாகவும் விமர்சனங்கள் எழுந்துள்ளன. இவ்வாறான சூழ்நிலையில் இன்று இலங்கை அரசினாலும், அமைச்சரவையினாலும் பலதாரமணத்திற்கான அனுமதி நீக்கப்பட வேண்டும் எனும் கோரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது (பாலசந்தரன், 2021). எனவே, பல்வேறு வழிகளில் தவறாக பிரயோகிக்கப்பட்டு வரும் இச்சலுகையானது, சரியான முறையில் அதன் உண்மைத் தன்மையுடன் சட்டமாக்கப்படாமலும், இஸ்லாம் கூறிய வழியில் புரிந்துகொள்ளப்படாமலும், தவறாக சமூகத்தில் பிரயோகிக்கப்படுகின்றமையுமானது இவ்வாய்வுக்கான பிரச்சினையாக கொள்ளப்படுகின்றது.

## 3. ஆய்வின் நோக்கம்

இலங்கை முஸ்லிம் தனியார் சட்டத்தின் ஒரு பகுதியான விவாக-விவாகரத்து சட்டத்தின் (MMDA - Muslim Marriage and Divorce Act) கீழ் பலதாரமணம் தொடர்பான சட்ட ஏற்பாடுகளும் அதன் நடைமுறைகளும் எவ்வளவு தூரம் இஸ்லாமிய ஷரீஆவுடன் இயைந்து செல்கிறது என்பதனை பகுப்பாய்வு செய்தல்.

## 4. ஆய்வு முறையியல்

பண்புசார்ந்த விவரண ஆய்வான இது முழுமையாக இரண்டாம் நிலைத் தரவுகளையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. அதற்காக தலைப்புடன் தொடர்புபட்ட முன்னைய இலக்கியங்களான ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள், சஞ்சிகைகள், இணையத்தள ஆக்கங்கள், காணொளிகள் என்பவற்றுடன் இலங்கை விவாக-விவாகரத்து சட்டம் (MMDA) என்பன மீளாய்வுக்குட்படுத்தப்பட்டு, பெறப்படும் தரவுகள் கருதுகோள் கட்டமைப்பினூடாக பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

## 5. கலந்துரையாடல்

1770 ஆம் ஆண்டில் இலங்கைக்கு பட்டேவியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட முஸ்லிம் சட்டக் கோவையானது அலெக்சாண்டர் ஜோன்சன் அவர்களது முயற்சியினாலும் 1806 ஆம் ஆண்டு முகம்மதியன் சட்டக் கோவையாக உருவாக்கப்பட்டது. இதனை ஆரம்பகட்டமாக கொண்டு தொடர்ந்து பல மாற்றங்களுடன் 1929ஆம் ஆண்டு முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. இங்கு இணைக்கப்பட்ட ஓர் அம்சமான பலதாரமணமானது எவ்வித கட்டுப்பாடுகளும் இன்றி ஒரு ஆண் பலதாரமணம் புரிவதற்கான அனுமதியை வழங்கியுமிருந்தது (கொடிகார, 2011). 1951ஆம் ஆண்டின் சட்ட ஏற்பாடு பிரிவு 24 (1)-(4) வரையான இலக்கங்கள் பலதாரமணம் தொடர்பான படிமுறைகளை முன்வைக்கிறது. 24(1) திருமணமான ஒரு முஸ்லிம் ஆண் இரண்டாவது அல்லது மூன்றாவது அல்லது நான்காவது திருமணத்தினை செய்ய நாடினால் திருமணத்திற்கு குறைந்தது 30 நாட்களுக்கு முன்னர் தான் வசிக்கும் பிரதேசத்தில் உள்ள காழிக்கு அறிவிக்க வேண்டும். அத்தோடு தன்னுடைய ஏனைய மனைவி அல்லது மனைவிகள் வசிக்கும் பிரதேச காழிக்கும் அறிவிப்பதோடு புதிதாக திருமணம் செய்யவிருக்கும் நபரின் பிரதேச காழிக்கும் அறிவித்தலை வழங்க வேண்டும்.

(2) ஒவ்வொரு அறிவிப்பும் அதனுள் துணைப்பிரிவுகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். 1. பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் அறிவித்தல் வழங்கும் நபரினதும், அவரது ஒவ்வொரு மனைவியினதும் மற்றும் திருமண ஒப்பந்தம் செய்யவிருக்கும் பெண்ணினதும் முழுப் பெயர் மற்றும் முகவரி என்பவை உள்வாங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(3) அவ்வாறான துணைப் பிரிவு 1இல் பிரகாரம் கிடைக்கபெற்ற அறிவித்தலின் நகல் ஒன்றினை அறிவிப்பில் வழங்கப்பட்ட முகவரி கொண்ட பிரதேசத்தின் எல்லா ஜும்மா பள்ளிவாசல்களிலும், ஏனைய பகிரங்க இடங்களிலும் காட்சிப்படுத்தல் ஒவ்வொரு காழியினதும் கடமையாகும். (4) ஒரு பலாதாரமணமானது அறிவித்தல் கிடைத்தது பற்றிய காழியின் சான்றிதழ் கிடைக்கும் வரையிலும் பதிவு செய்யப்பட மாட்டாது. (Marriage and Divorce (Muslim), Cap.134)

மேற்குறித்த நான்கு உபபிரிவுகளுமே பலதாரமணத்திற்கான சட்ட ஏற்பாடுகளும் நிபந்தனைகளுமாக முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளன. இதனடிப்படையில் பலதாரமணம் செய்ய நாடும் முஸ்லிம் ஆண்கள் காழி நீதிமன்றின் ஊடாக திருமணம் செய்துகொள்கின்றனர். இலங்கைச் சூழலை பொறுத்தவரை இந்த நடைமுறையானது சமூக மட்டத்தில் பல்வேறு சிக்கல்களை உருவாக்கி, விமர்சனத்திற்குட்பட்டுள்ளது.

இலங்கை பெரும்பான்மையாக பௌத்த மக்கள் வாழும் நாடு என்ற வகையில் பலதாரமணமானது சட்ட ரீதியற்றதாக காணப்படுகின்ற போதிலும் இது முஸ்லிம் குடிமக்கள் மீது அனுமதிக்கப்பட்டதாக காணப்படுகிறது. இருப்பினும் முஸ்லிம் திருமணம் மற்றும் விவாகரத்து சட்டத்தில் முன்மொழியப்பட்ட மாற்றங்களின் ஒரு பகுதியாக பலதாரமணத்தை ஜூலை 2021 இல் தடை செய்ய இலங்கை அமைச்சரவை ஒப்புக்கொண்டிருந்தது. பொதுவாக இலங்கையில் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற போதிலும் 1981 மற்றும் 2011இல் முழு மக்கள் தொகை கணக்கெடுப்புக்களை ஒப்பிட்டு பார்க்கையில் சிங்களவர்களின் சனத்தொகை 1% (4.2

மில்லியன்) அதிகரித்துள்ள அதேவேளை முஸ்லிம்களின் வளர்ச்சி 2.1% (0.8 மில்லியன்) ஆல் அதிகரித்துள்ளது. இவ்வாறு மக்கள் தொகை அதிக வளர்ச்சியானது பலதாரமணத்தை தடைசெய்ய வேண்டும் என்ற முயற்சிக்கு முக்கிய காரணமாகவும் கூறப்படுகிறது (பாலசந்தரன், 2021). இஸ்லாம் அனுமதித்துள்ள பலதாரமணம் என்பது பெண்களுக்கு உரித்தான சகல உரிமைகளையும் வழங்கியிருந்தும் கூட இன்று இலங்கையில் தடைசெய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கை ஒரு மதத்திற்கு எதிரான காழ்ப்புணர்வினை புலப்படுத்துகின்றது. இங்கு பலதாரமணம் என்பது ஒரு சிக்கலாகவன்றி அது எவ்வாறு புரியப்பட்டுள்ளது என்பதே பிரச்சினையாக உருவாகியுள்ளது. அது மட்டுமன்றி பல பாலியல் உறவுகளில் ஈடுபடும் நபர்கள் குற்றவாளிகளாகப் பார்க்கப்படாமல் சட்ட அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்படும் பலதாரமணம் ஓர் குற்றமாகவும் அநீதியாகவும் பார்க்கப்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது (Usuf, 2022).

அகில இலங்கை ஜம்இயதுல் உலமாவின் கருத்துப்படி "பலதாரமணம் அனுமதிக்கப்படவில்லை எனில் விபச்சாரம் ஒரு வழக்கமாகிவிடும்" (SrilankaBrief, 2017). பொதுத் திருமணப் பதிவுச் சட்டத்தின் (General Marriage Registration Ordinance) பிரிவு 19 (2)ன் கீழ், திருமணத்திற்குப் பிறகு விபச்சாரத்தில் ஈடுபடுவது விவாகரத்துக்குக் காரணமாக இருக்கலாம். இருப்பினும், அக்குற்றச்சாட்டை நிரூபிப்பது கடினமானதும். பலதாரமணத்தைத் தடை செய்வது எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும் (Usuf, 2021). மாறாக நேர்மறையான ஆக்கபூர்வமான சிந்தனைகள் மூலம் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் என்பவற்றால் பலதாரமணத்தை கட்டுப்படுத்தப்பட வேண்டும். அத்தோடு ஏனைய நாடுகளில் உள்ளவற்றை அப்படியே நகல் செய்து கொள்ளாமல் இலங்கையின் தனித்துவம் பேணப்படும் வகையில் இலங்கைக்கே உரித்தான முறையில் ஓர் உள்ளூர்தீர்வு உருவாக்கப்பட வேண்டும்.

இலங்கைச் சட்டத்தில் பலதாரமணம் புரியவிருக்கும் ஓர் ஆணுக்கு அவர் அது தொடர்பாக அறிவித்தல் வழங்க வேண்டும் என்ற சட்டப்பிரிவின் நோக்கம் அது தொடர்பாக அவர் வாழும் சமூகத்தினர் அறிந்து கொள்ள வேண்டும் என்பதோடு சமூக ரீதியான ஓர் அழுத்தம் அவர் மீது செலுத்தப்பட வேண்டும் என்பதனாலுமாகும். இருப்பினும் மிகக் குறைந்தளவிலே இது நடைமுறையில் உள்ளது. அது போன்று சட்ட ஏற்பாடுகளை தவறாகப் பிரயோகித்து பலதாரமணம் புரியும் ஒரு முறையற்ற ஆணை கண்டறியக்கூடிய எந்தவித சட்டப் பொறிமுறைகளும் இணைத்துக் கொள்ளப்படவுமில்லை (சலீம், 2011).

அடையாளப்படுத்தப்பட்டுள்ள மற்றுமொரு பிரச்சினையாக சட்ட ரீதியாக இரண்டாம் மூன்றாம் திருமணங்கள் புரிவதற்காக மதம் மாறுவதாகும். அதாவது இலங்கை முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்டுள்ள இந்த சட்ட அனுமதியானது வேறு சமயத்தை சார்ந்தவர்களாலும் தவறாக பிரயோகிக்கப்படும் நிலையும் காணப்படுகிறது (கொடிகார, 2011). சலீம் மர்சூப் (2001: ப. 33) அவர்கள் தன்னுடைய ஆய்விலே, இஸ்லாத்தில் நுழைவதற்கு முன்னர் ஒருதாரமணத்தில் இருந்த ஒரு ஆண் இஸ்லாத்தில் நுழைந்த பின்னர் பலதாரமணம் செய்து கொள்வதோடு இது தொடர்பாக பல சர்ச்சைகள் இலங்கையில் இடம்பெற்றுவருகின்றன. குயின் எதிர் ஒபெய்சேகற (1889) எனும் வழக்கானது பிரதிவாதி தன்னை முகம்மதியன் மதத்தை பின்பற்றுபவர் என்பதனை வெளிப்படுத்தியதற்கான ஆதாரங்கள் இல்லை என நீதிமன்றம் கருதியதால் அவர் ஒரு முஸ்லிம் அல்ல என்றும் இரண்டாம் திருமணம் செய்துகொண்ட நபர் இருதாரமணக் குற்றம் புரிந்தவராகவும் கருதப்பட்டார் எனவும் தீர்ப்பு வழங்கியது.

இலங்கைச் சூழலில் பலதாரமணமானது ஒருவர் தன்னுடைய முதல் மனைவியுடனான குடும்பத்தைப் போதிய அளவு பராமரிக்க முடியாத நிலையில் கூட எவ்வித பொருளாதார வசதியுமின்றி அவர் அடுத்த திருமணம் ஒன்றைச் செய்து கொள்வதற்குரிய எளிய வழிமுறையிலே நடைபெறுகின்றது. இது இலங்கையில் பலதாரமணம் ஏற்படுத்தியுள்ள பல்வேறு விளைவுகளுள் ஒன்றாகும். இவ்வாறான ஓர் நிலைமை தோன்றுவதற்கு அடிப்படையான காரணம்

சட்ட ஏற்பாடுகளில் உள்ள குறைபாடே ஆகும். ஒரு ஆண் இரண்டாவது அல்லது மூன்றாவது அல்லது நான்காவது திருமணத்தைச் செய்ய விரும்பும் போது வெறுமனே அறிவித்தல் கொடுக்க வேண்டும் என்பதிலே இலங்கைச் சட்டம் நின்று விடுகின்றது. அவரது பொருளாதார நிலை கருத்தில் கொள்ளப்பட்டு காழியினால் தீர விசாரணைக்கு உட்படுத்திய பின்னர் அவர் திருமணம் செய்ய வேண்டும் என்ற ஒரு நடைமுறை இங்கு கிடையாது. முஸ்லிம் சமூகத்தில் இன்று பலதாரமணம் செய்வோரில் 95% ஆனோர் தமது பிரதேச காழி நீதவானுக்கு அறிவித்தல் கொடுப்பதில்லை என்பதோடு பகிரங்கப்படுத்த விரும்புவதுமில்லை என்பதே யதார்த்தமாகும். எவ்வாறாயினும் இந்நிபந்தனைகள் எதுவும் பூர்த்தி செய்யப்படாவிடினும் அத்திருமணம் வலிதாகும் என்றே இலங்கை முஸ்லிம் தனியார் சட்டம் குறிப்பிடுகின்றது (ரவுப், 2021). காழி ஒருவரின் பொறுப்புணர்வற்ற செயற்பாடும் பலதாரமணம் பிழையாகப் பிரயோகிக்கப்படுவதற்கு இன்னுமொரு காரணமாக அமைந்துள்ளது. காழி ஒருவர் எவ்வாறான தகைமைகளை அடிப்படையாகக் கொண்டு நியமிக்கபடுகிறார் என்பதும் இங்கு கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும். “நன்நடத்தையுள்ள முஸ்லிம் ஆண்” (MMDA, cap.134) எனும் தகுதியின் அடிப்படையில் மாத்திரம் காழியின் தகைமைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. காழியாக வருவதற்கு எவ்விதமான கல்வித் தகைமைகளும் இங்கு குறித்துக் காட்டப்படவில்லை என்பதும் இங்கு கவனத்தில்கொள்ளப்படவேண்டிய ஒரு விடயமாகும்.

தன்னுடைய கணவன் மறுமணம் செய்து கொண்டார் என்பதனை பெரும்பாலான பெண்கள் அறியாதிருக்கின்றனர் (சியானா, 2020). மறுமணம் உரிய முறையில் பதிவு செய்யப்படாமலும் அதன் மூலம் பெற்றெடுக்கப்படும் குழந்தைகள் முறையற்ற குழந்தைகளாக பார்க்கப்படுவதோடு, தன்னுடைய தகப்பணின் பெயரை தன்னுடைய பெயரோடு இணைத்துக் கொள்ள முடியாத ஓர் கடின நிலைக்குத்தள்ளப்படுகிறன (அமீர், 2021). இது குழந்தைகளின் சுபீட்சமான எதிர்காலத்திற்கு ஒரு இடையூராகவும் அமைந்துவிடுகிறது.

Muslim Personal Law Reform Action Group (2022) அறிக்கை பலதாரமண நடைமுறைகள் ஆவணப்படுத்தப்படாமலும் அதன் துஷ்பிரயோகங்கள் அறிக்கைகளிலிருந்து மறைக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டுகிறது. பாதிக்கப்பட்ட பெண்களிள் சான்றுகளை தமது அறிக்கையில் சமர்ப்பித்துள்ளனர். அவற்றில் 17 வயதில் திருமணம் செய்து கொண்ட ஷமிரா கணவனால் கைவிடப்பட்டு, இரண்டாவது திருமணத்திலும் கணவன் தனது முன்னால் மனைவியினை மீண்டும் மறுமணம் செய்ய நாடி பலதாரமணம் எனும் பெயரில் ஷமிராவினையும் அலைக்கழியும் நிலைக்கு ஆளாக்கியுள்ளார். இது போன்று ஜைனப் மற்றும் பாத்திமா என்போர்களது சம்பவங்களை எடுத்துக் கூறுவதன் மூலம் எவ்வாறான வழிகளில் இப்பலதாரமண முறையானது பெண்களினது வாழ்வில் பாதிப்பினை ஏற்படுத்தி உள்ளது என்பதனை எடுத்துரைக்கின்றனர்.

எனவே, இதனடியாக இவ்வாய்வானது பலதாரமணச் சட்டம் தொடர்பாக அல்குர்ஆனும் சுன்னாவும் விபரித்துள்ள அமைப்பை அடிப்படையாகக் கொண்டு இலங்கையில் விவாக விவாகரத்து சட்ட ஏற்பாட்டிலுள்ள பலதாரமணச் சட்ட உடன்பாட்டை கண்டறிய முயல்கின்றது.

இஸ்லாமிய ஷரீஆவின் அடிப்படையில், ஒரு முஸ்லிம் பலதாரமணம் செய்துகொள்ள நாடினால் அல்லாஹ்வினாலும் அவனது தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களினாலும் வழங்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உள்ளாகவிருந்தாலன்றி அவர் பலதாரமணம் செய்து கொள்ள அனுமதியில்லை. எனவே, அந்த வரையறைகளுக்கு உள்ளே நின்று கொண்டு பலதாரமணத்திற்கான சட்டங்களை வகுத்துக் கொள்ளும் போது தான் அது இறைவனால் ஏற்கப்படக்கூடிய சீரான நிலையில் அமையப்பெறும். அல்-குர்ஆன், சுன்னாவின் வழியில் நின்று பரதாரமணத்திற்கான நிபந்தனைகளாக பின்வருவனவற்றை குறிப்பிடலாம்,

### *1. நான்காக மாத்திரம் மட்டுப்படுத்தல்*

முஸ்லிம் ஆண் ஒரே நேரத்தில் நான்கு மனைவிகளுக்கு மேலதிகமாக மணம் செய்து கொள்ள முடியாது என்பதுவே இறை தீர்ப்பாகும். "அனாதைகள் விஷயத்தில் நேர்மையாக நடக்க மாட்டீர்கள் என்று அஞ்சினால் மற்றப் பெண்களில் உங்களுக்கு இரண்டிரண்டாக, மும்மூன்றாக, நான்கு நான்காக மணந்து கொள்ளுங்கள்!......." நபியவர்கள் காலத்தில் எண்ணிக்கையில் எவ்வித கட்டுப்பாடுகளுமன்றி ஆண்கள் ஒரு நேரத்தில் நூறு பெண்கள் வரையும் மணம்செய்திருந்துள்ளனர். எனவே, இவ்வாறான நிலையை இஸ்லாம் மட்டுப்படுத்தி அனுமதித்தது (ரவுப், 2021).

"அல்-குர்ஆனிய சட்டம் பலதாரமணத்தினை உறுதி செய்கிறதா அல்லது கட்டுப்படுத்துகிறதா என்று நோக்கும் போது திருமணம் தொடர்பான குர்ஆனிய சட்டம் பரவலாக நடைமுறையில் இருக்கும் பலதாரமணத்தினை அங்கீகரிக்கும் நோக்கத்தை விட, அந்த நேரத்தில் முடிந்தவரை அதை சீர்திருத்தவே முயன்றுள்ளது'' இக்கண்ணோட்டத்தின் படி நபிகளாரின் இறுதி நோக்கம் திருமணத்தை பலதாரமணத்தில் இருந்து ஒருதாரமணமாக மாற்றுவதாகும். அல்குர்ஆனின் திருமணச் சட்டத்தின் இறுதி நோக்கம் பலதாரமணத்தை ஆதரிப்பதை விட ஒருதாரமணத்தை முறைப்படுத்துவதாகும் (ஜலால்டீன், 2004). நான்கு மனைவிகளை கொண்டிருக்கும் ஒரு ஆண் ஐந்தாவதாக ஒரு திருமணம் செய்வார் எனில் அத்திருமணம் வலிதற்றதாக ஆகிவிடும். அவர் தனது நான்கு திருமணங்களில் ஒன்றை விவாகரத்து செய்த பின்னர் ஐந்தாவதாக செய்யும் திருமணம் செல்லுபடியானதாக அமையும்.

### *2. நீதி மற்றும் சமத்துவம்*

இலங்கையில் மேற்கூறியது போன்று நிகழும் பலதாரமணங்களினை முன்னிறுத்திப் பார்க்கையில் தமது மனைவிகள் மத்தியில் சமத்துவம் பேணுதல் என்பது மிக அரிதான அம்சமாகும். MMDA ஆனது பெயரளவிலே இவ்வம்சங்களை கொண்டிருக்கின்றது. ஆனால் இஸ்லாம் இதனை கட்டாய நிபந்தனையாக விதித்திருக்கின்றது (புகாரி, 2021)

"وَإِنْ خِفْتُمْ أَلا تُقْسِطُوا فِي الْيَتَامَى فَانْكِحُوا مَا طَابَ لَكُمْ مِنَ النِّسَاءِ مَثْنَى وَثُلاثَ وَرُبَاعَ فَإِنْ خِفْتُمْ أَلا تَعْدِلُوا فَوَاحِدَةً أَوْ مَا مَلَكَتْ أَيْمَانُكُمْ ذَلِكَ أَدْنَى أَلا تَعُولُوا" ( سورة النساء:3)

"அனாதைகள் விஷயத்தில் நேர்மையாக நடக்க மாட்டீர்கள் என்று அஞ்சினால் மற்றப் பெண்களில் உங்களுக்கு இரண்டிரண்டாக, மும்மூன்றாக, நான்கு நான்காக மணந்து கொள்ளுங்கள்! (மனைவியரிடையே) நீதியாக நடக்க மாட்டீர்கள் என்று அஞ்சினால் ஒருத்தியை அல்லது உங்களுக்கு உடைமையாக உள்ள அடிமைப் பெண்களை (போதுமாக்கிக் கொள்ளுங்கள்!). இதுவே நீங்கள் வரம்பு மீறாமலிருக்க நெருக்கமான வழி." (அல் குர்ஆன்: ஸூரா அந் நிஸா: 3)

இவ்வசனத்தின் பிரகாரம் எந்தவொரு முஸ்லிம் ஆணும் பலதாரமணம் புரிவதாக இருந்தால் அவர் தனது மனைவிகளிடத்தில் பாரபட்சமின்றி நியாயமான முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்பதே நிபந்தனையாகும். இருப்பினும் ஸூரா அந் நிஸா : 129 ஆவது வசனமானது "நீங்கள் எவ்வளவுதான் விரும்பினாலும், மனைவியரிடையே நீங்கள் நீதம் செலுத்துதல் சாத்தியமாகாது. ஆனால், (ஒரே மனைவியின் பக்கம்) முற்றிலும் சாய்ந்து மற்றவளை அந்தரத்தில் தொங்கவிடப்பட்டவள் போன்று ஆக்கி விடாதீர்கள். நீங்கள் (அல்லாஹ்வுக்குப்) பயந்து சமாதானமாக நடந்து கொள்வீர்களானால், நிச்சயமாக அல்லாஹ் மிகவும் மன்னிப்பவனாகவும், மிக்க கருணையுடையவனாகவும் இருக்கின்றான்'' என்பதன் ஊடாக

மனைவியரிடையே நீதமாக நடப்பதும், சம அளவில் அன்பு செலுத்துதலும் அசாத்தியமானது என்பதை புலப்படுத்துகிறது (மஸாஹிர், 2014).

எவ்வாறு தான் ஒரு ஆண் சமமாக நடந்து கொள்ள விரும்பினாலும் மனிதன் எனும் வகையில் அது முடியாத ஓர் அம்சமாக ஆகிவிடும். ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவிக்கும் போது, இறை தூதரவர்கள் தன்னால் முடியுமானவரை தன்னிடம் உள்ளவற்றை தன் மனைவிமார்களிடையே பகிர்ந்து கொடுத்தார்கள், அதே வேளை தன்னுடைய உணர்வுகள், உள்ளம் என்பவற்றால் தான் ஏதும் தவறு இழைத்திருப்பின் அல்லாஹ்விடம் மன்னிப்பும் வேண்டியுள்ளார்கள் எனவும் கூறியுள்ளார்கள் (மஸாஹிர்,2014). அல்குர்ஆன், சுன்னாவின் அடிப்படையில் தனது மனைவியர் மத்தியில் சமநிலை பேண முடியாத ஆண் எவ்வகையிலும் பலதாரமணம் புரிய அனுமதிக்கப்படமாட்டார்.

### *3. மற்றொரு மனைவியைப் பராமரிப்பதற்கான திறன் கொண்டிருத்தல்.*

இலங்கையில் காழிகளுக்கு குறித்த ஆணின் பொருளாதார கொள்ளளவினை ஆய்ந்து அறிந்து கொள்வதற்கான சகல அதிகாரங்களும் வழங்கப்பட்டிருக்கும் நிலையில் உரிய முறையில் அவை நிறைவேற்றப்படுதல் வேண்டும் என இலங்கை பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னனி கோருகின்றது (MWRAF) (புகாரி, 2021). ஒரு நபர் மறுமணம் புரிவதற்கான பொருளாதார தகைமை கொண்டவராக இல்லாத நிலையில் அவர் இன்னொரு திருமணத்தினை நாடுவதற்கு அனுமதியற்றவர் ஆவார்.

அடிப்படையில் இஸ்லாம் பொருளாதார வசதி கொண்டவர் திருமணம் செய்து கொள்ள முடியும் என்றும் அதற்கு சந்தர்ப்பம் இல்லாதவர்கள் நோன்பு நோற்றுக்கொள்ளட்டும் எனவும் உபதேசிக்கிறது. நபகா எனும் பராமரிப்பு செலவு என்பது ஒரு கணவன் தன் மனைவிக்கு கட்டாயம் வழங்க வேண்டிய ஒன்றாக இஸ்லாம் பணிக்கிறது. எனவே, ஒருவர் மறுமணம் புரிய நேரிடும் போது கட்டாயம் அவரது பொருளாதார தகைமை கவனிக்கப்படுதல் வேண்டும். ஒவ்வொரு மனைவிகளுக்குமான சகல வசதிகளும் சம அளவு செய்து கொடுக்கப்படவும் வேண்டும் (இப்ராஹீம், 2022). இலங்கை விவாக-விவாகரத்து சட்டத்தில் இத்தகைய தகைமை பரிசீலனை செய்யப்பட வேண்டும் என்ற எந்தவொரு சட்ட ரீதியான பரிமாணங்களும் உள்வாங்கப்படவில்லை. அவ்வாறே எழுத்துருவில் உள்ள எந்த நிபந்தனைகளும் கூட உரிய முறையில் கடைப்பிடிக்கப்படுவதும் கிடையாது. இதனால் ஒன்றுக்கு மேல் திருமணம் செய்பவர்கள் அதனை துஷ்பிரயோகம் செய்துகொள்ளும் நடைமுறையே காணப்படுகிறது (ரவுப், 2021)

### *4. உளவியல் மற்றும் உடலியல் தேவைகளை பூர்த்தி செய்தல்.*

مَنْ كانت له امرأتان فَمَالَ إلى إحْداهُما جاء يومَ القيامةِ وشِقُّهُ عن أبي هريرة، عن النبي –صلى الله عليه وسلم– قال:

رواه أبو داود والترمذي والنسائي وابن ماجه والدارمي وأحمد}– (.صحيح{مَائِلٌ.)

அபூ ஹுரைரா (ரழி) அவர்கள் நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் கூறியதாக அறிவிக்கிறார்கள். “எவர் ஒருவர் இரண்டு மனைவிகளைக் கொண்டிருந்து அவர்களில் ஒருவரின் பக்கம் அதிக விருப்பு கொண்டவராக இருப்பின் மறுமையில் அவர் ஒரு பக்கத்திற்கு சாய்ந்தவராக வருவார்.”(அபூ தாவுத், திர்மிதி, நஸாஈ, இப்னு மாஜா, தாரமி, அஹ்மத்)

இந்த ஹதீஸில் பிரயோகிக்கப்பட்டுள்ள சாய்ந்திருத்தல் (مال) எனும் வார்த்தையினை அல் கத்தாபி அவர்கள், “ஒரு மனைவியின் மீது அதிகப்படியான சாய்வு இருப்பதாகும்” என்கிறார்.

கணவன் தனது மனைவிகளை சரிசமமாக கையாள்வதில் mua'asarah (معاشرة) எனும் பாலியல் தேவையினை பூர்த்தி செய்வதும், இணைந்திருப்பதும் (accompany (صحبة) அவர் மீது கடமையாகும் அது ஒவ்வொரு மனைவியினதும் உரிமையாகவும் அமைகிறது. யூஸுப் அல்-கர்ளாவி "சாய்ந்திருத்தல் என்பது தனது மனைவியின் உரிமையினை குறைத்து மதிப்பிடுவதை குறிக்கிறது" தன் மனைவிகளிடையே உணவு, உடை, இருப்பிடம், ஆரோக்கியம் போன்ற தேவைகளை நிறைவேற்றுவதாக இருத்தல் வேண்டுமென கருதுகிறார் (ஹுஸைன், 2019).

இவற்றிற்கு மேலதிகமாக இஸ்லாம் ஒரு பெண்ணை திருமணம் செய்து கொள்ளும் போது அவள் நிபந்தனைகள் இட்டு திருமணம் செய்து கொள்ள முடியும் என்ற வகையில் ஒரு மனைவி தனது நிபந்தனையில் குறித்த கணவன் பலதாரமணம் செய்து கொள்ள கூடாது எனக் கூறியிருப்பின் குறித்த கணவன் அதனை மீறுவது குற்றமாகப் பார்க்கப்படுகிறது. இதை உக்பா பின் ஆமிர் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "நிறைவேற்றப்பட வேண்டிய நிபந்தனைகளில் முதன்மையானது யாதெனில், உங்கள் மனைவியரை உங்களுக்கு அனுமதிக்கப்பட்டவர்களாக ஆக்கிக்கொள்வதற்காக நீங்கள் (அவர்களிடமிருந்து) ஏற்றுக்கொண்ட நிபந்தனையே ஆகும்" (நூல்: புகாரி: 2721, முஸ்லிம்: 1418)

மிஸ்வர் இப்னு மக்ரமா (ரழி) அறிவித்தார்: இறைத்தூதர் (ஸல்) அவர்கள் சொற்பொழிவு மேடை (மிம்பர்) மீதிருந்த படி, "ஹிஷாம் இப்னு முஃகீரா கோத்திரத்தார் தங்கள் (உறவினரான அபூ ஜஹ்லுடைய) மகளை அலீ இப்னு அபீ தாலிப் அவர்களுக்கு மணமுடித்து வைக்க (என்னிடம்) அனுமதி கோரினர். அதற்கு நான் அனுமதிக்க மாட்டேன். மீண்டும் நான் அனுமதிக்க மாட்டேன். மீண்டும் நான் அனுமதிக்கமாட்டேன். அலீ இப்னு அபீ தாலிப் அவர்கள் என் மகளை (பாத்திமாவை) விவாகவிலக்குச் செய்துவிட்டு, அவர்களின் மகளை மணமுடித்துக்கொள்ள விரும்பினாலே தவிர (அவர்களுக்கு நான் அனுமதி வழங்கமாட்டேன்). பாத்திமா என்னில் ஒரு பகுதியாவார். பாத்திமாவை வெறுப்படையச் செய்வது என்னை வெறுப்படையச் செய்வதாகும் அவரை வேதனைப்படுவது என்னை மன வேதனைப்படுத்துவதாகும்" என்று கூறினார்கள். (நூல்: புஹாரி 5230)

பாத்திமா (ரழி) அவர்களின் திருமணத்தின் போது அலி (ரழி) அவர்கள் வழங்கிய வாக்குறுதியை நபி (ஸல்) அவர்கள் தன்னுடைய மற்றொரு மகளின் கணவரை சுட்டிகாட்டி நினைவு கூறுகிறார்கள். திருமணத்திற்கு முன்பே நிபந்தனைகள் பேசப்பட வேண்டும் என்பதை மேற்கண்ட ஹதீஸ்கள் தெளிவாக உணர்த்துகின்றன. மேலும் பலதாரமணம் புரிய நிபந்தனை அற்ற அனுமதி இருக்குமானால், நபி (ஸல்) அவர்களிடமோ, அல்லது பாத்திமா (ரழி) அவர்களிடமோ அனுமதி பெற வேண்டிய அவசியம் அலி (ரழி) அவர்களுக்கு இல்லை. அவர்களது அனுமதி கோரல் என்பது திருமணம் ஒப்பந்தத்தில் போடப்பட்ட நிபந்தனையின் அடிப்படையில்தான் என்பதை புரிய முடிகிறது.

ஒரு மனிதன் மறுதிருமணம் செய்துகொள்ள மாட்டேன் என்ற நிபந்தனையை ஏற்று இருந்தால் அதை நிறைவேற்றுவது ஆணின் மீது கடமையாகும். அந்த நிபந்தனயை அவர் மீறும் போது அந்த பெண் திருமண ஒப்பதத்தை முறிக்கலாம் என இப்னு கைய்யிம் அவர்கள் ஜாத் அல் மாத் (5/117-118) எனும் நூலில் கூறியுள்ளார் (பராஸ், 2013).

**முடிவுரை**

இலங்கை 1951 முஸ்லிம் தனியார் சட்டம் கொண்டிருக்கும் விவாக-விவாகரத்துப் பிரிவின் ஓர் ஏற்பாடான பலதாரமணமானது இலங்கை முஸ்லிம்களுக்கு அனுமதிக்கப்பட்ட ஓரு அம்சமாக காணப்படுகிறது. இலங்கையில் திருமணம் செய்ய நாடும் ஒரு முஸ்லிம் அதனை அறியப்படுத்துதல் தவிர வேறு இஸ்லாமிய ஷரீஆ வித்தித்துள்ள எவ்வித நிபந்தனைகளையும்

சட்டவாக்கத்தின் போது தெளிவாக இணைத்துக் கொள்ளவது தவறவிடப்பட்டுள்ளது. இதன் விளைவாக இலங்கையில் நிகழும் பெரும்பாலான பலதாரமணங்களினால் பெண்கள், பிள்ளைகளினுடைய வாழ்வு பாரிய சிக்கலுக்குள்ளாக்கியுள்ளதை ஆய்வுகள், அறிக்கைகள், அவதானங்கள் என்பவற்றின் மூலம் அறிய முடிகிறது. முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழக்கூடிய மொரோகோ, மலேசியா போன்ற நாடுகளில் பலதாரமணம் புரிவதென்பது மிகக் கட்டுப்பாடான நிபந்தனைகளுக்கு மத்தியில் அசாத்தியமான நிலையே காணப்படுகிறது. எனவே, இஸ்லாமிய வரையறைக்குள் நான்கு திருமணங்கள் வரை மட்டுபடுத்தியிருப்பதற்கிணங்க அவற்றிற்கான அனைத்து வரையறைகளையும் இலங்கை விவாக-விவாகரத்து சட்டம் உட்கொண்டு அமையுமாக இருப்பின் பலதாரமணங்கள் நிகழ்வதையும் அவற்றின் பாதகமான விளைவுகளையும் தவிர்ந்துகொள்ளவும் ஏதுவாக அமையும். எவ்வாறாயினும் முஸ்லிம்களுக்கு விதிக்கப்பட்டுள்ள இஸ்லாமிய சட்டங்களானது அதன் ஆழம் வரை புரியப்பட்டு மகாஷிது ஷரீஆ மற்றும் பிக்ஹுல் அகல்லிய்யத் என்பவற்றின் அடிப்படையில் நடைமுறைக்கு கொண்டுவரும் பொழுது இலங்கைக்கே உரித்தான ஓர் சீரிய இஸ்லாமிய குடும்பவியல் சட்டமுறையினை உருவாக்க முடியும்.

**உசாத்துணைகள்:**


மஸாஹிர், எஸ்.எம்.எம். (2014). *இஸ்லாமிய நோக்கில் பலதாரமணம்.* மீள்பார்வை ஊடக மையம்.

ஸெய்ன றவுப். (2021). *முஸ்லிம் விவாக-விவாகரத்து சட்டம்: ஓர் இஸ்லாமிய நோக்கு.* ஆய்வுக்கும் மேம்பாட்டுக்குமான இஸ்லாமிய மகளீர் ஒன்றியம்.

சியானா, எம்.எம்., ஜெஸீல், எம்.ஐ.எம். (2020). பலதாரமணம் குறித்து முதல் தாரங்களின் கருத்தாக்கம்: கிண்ணியா பிரதேச நிலை பற்றிய ஆய்வு. *Kalam Internatonal Research Journal*. *5*(2),71-84

கொடிகார சூளனி. (2011). *இலங்கையில் முஸ்லிம் குடும்பச் சட்டம்: கொள்கை, நடைமுறை மற்றும் பெண்கள் தொடர்பான அக்கறைக்குரிய விடயங்கள்.* முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி / முஸ்லிம் சட்டங்களின் கீழ் வாழும் பெண்கள் ஒன்றியம்.

தீர்வைத் தேடி. (2019). *இஸ்லாம் கூறும் பலதாரமணத்தில் பெண்ணின் உரிமை.* https://www.theervaithedi.com/2019/08/blog-post.html

அஹமட் நிஹால், கெ. (2019). *இஸ்லாமிய ஷரீஆ அடிப்படையில் முஸ்லிம் தனியார் சட்ட திருத்த கோரிக்கை.* மனித எழுச்சி நிறுவனம்.

Balachandran, P.K. (2021). *Issues in banning polygamy in Sri Lanika.* https://counterpoint.lk

World Population Review. (2022). *Countries Where Polygamy Is Legal 2022* https://worldpopulationreview.com/

Chusanayaini Ayyas Sagidatul.(2014). Dynamics of Tunisian Polygamy law in gender Perspective. http://www.researchgate.net

Faaiz Ameer. (2021). *It's Time to free Muslim Women from Their Shackles.* Journalism for Citizens. https://groundviews.org/2021

Fowzul Mohamed Buhary, & Sikandar Shah Haneef. (2020). *Women's Advocacy For Imposing Stringent Stipulations on Polygamy in Muslim Marriage and Divorce Act Of Sri Lanka: A Juristic Analysis.* International Journal for Studies on Children, Women, Elderly and Disabled, Vol. 11. https://www.researchgate.net/publication/348769128_

Husain,T., Arifuddin, Siti Aisyah, & Alwi. (2019). *Polygamy in the Perspective of Hadith: Justice and Equality among Wives in a Polygamy practice.* https://www.researchgate.net/journal/

Jaldeen, M.S. (2004). *The Muslim Law of marriage divorce and maintenance in Sri Lanka*. Haji Omar Foundation for Peace, Education and Research

Marsoof Saleem.(2011). *The Quazi Court System in Sri lanka and its Impact on Muslim Women.* Muslim Women's Research and Action Forum. https://www.academia.edu/302

Mplreforms. (2022). Polygamy in Sri Lanka- (Updated) Position Paper 3. https://mmdasrilanka.org

Musavah. (2021). Ending polygamy in Muslim marriage, https://www.musawah.org/

Vallely Paul. (2010). *The Big Question: What's the history of polygamy, and how serious a problem is it in Africa?.* https://www.independent.co.uk/news/world/africa/the-big-question-what-s-the-history-of-polygamy-and-how-serious-a-problem-is-it-in-africa-1858858.html

Nomani Faraz. (2013). *A Women's Taqwa In Relation To Polygamy.* In islamic discussions. https://www.gawaher.com/topic/740522-a

Nizam Ifham. (2021). *Make Polygamy legal for all, under strict condition-ACJU.* https://island.lk/

Sri Lanka Brief. (2017). *"If Polygamy was not permitted, adultery would become a norm"says Sri Lanka Muslim clergy!*. News,views and analysis of Human Rights & Democratic Governance in Sri lanka. https://srilankabrief.org/

*Usuf. L. (2021). Serial monogamy is also polygamy*. https://www.ft.lk/columns/Serial-monogamy-is-also-polygamy/4-720534

Zeitzen Miriam Koktvedgaard. (2018). *Polygamy (Polygyny, Polyandry).* https://onlinelibrary.wiley.com/doi/pdf/10.1002/9781118924396.wbiea1377